(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 98.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011, யூன் 22, புதன்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0041/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (5)

(அ) அரசாங்க பொறுப்பு முயற்சிகள் மீதான குழுவின் முன்னாள் தவிசாளர்களான, கௌரவ ஜோன் அமரதுங்க, கௌரவ ஜெயராஜ் பெர்னாந்துபுள்ளே, கௌரவ ரோகித்த போகொல்லாகம ஆகியோரினால் சமர்ப்பிக்கப்பட்ட அ.பொ.கு அறிக்கைகள் மீதும், கௌரவ விஜயதாச ராஜபக்ஷ அவர்களால் 2007.01.12 அன்று சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாகவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் திரு. மாயாதுன்ன அவர்களால் 2006, யூலை 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாகவும், அரசாங்கக் கணக்குகள் குழுவின் தவிசாளர் கௌரவ ரஊப் ஹகீம் அவர்களால் 2007.11.29ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட PS12 ஆம் இலக்க அறிக்கை தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்;

(ii) அவ்வறிக்கைகளின் பிரகாரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்களின் பெயர்களையும்;

(iii) குழு அறிக்கையின் பணிப்புரைகளுக்கமைய முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0529/ '10

2.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், திருக்கொண்டியாடுமடு - ஜயந்திபுர வீதியானது அபிவிருத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளதொரு வீதியா என்பதையும்;

(ii) ஆமெனில், இவ்வீதி தற்போது அபிவிருத்தி செய்யப்படடு வருகின்றதா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வீதியில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்றுவருமாயின்,

(i) அதன் நீளம் எத்தனை கிலோ மீட்டர்கள் என்பதையும்;

(ii) இதன் பணிகளை முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது என்பதையும்;

(iii) இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அந்தந்த நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திர விலைகள் யாவையென்பதையும்;

(iv) கேள்விப் பத்திரம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் மற்றும் குறித்த கேள்விப் பத்திரத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) இவ்வீதியை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்;

(ii) இன்றேல், வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெறப்பட்டதா என்பதையும்;

(iii) வெளிநாட்டு உதவி பெறப்பட்டிருப்பின், உதவி வழங்கிய நாட்டின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0801/ '10

3.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளின் பெயர்கள், விலாசங்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகளில் ஆசிரியர் மிகை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்;

(iv) ஆசிரியர் மிகை நிலவும் பாடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகள் யாவையென்பதையும்;

(ii) ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடங்கள் யாவையென்பதையும்;

(iii) ஆசிரியர் பற்றாக்குறை காணப்படும் பாசாலைகளுக்கு ஆசிரியர்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அதற்குத் தேவைப்படும் காலம் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0905/ '10

4\.

கௌரவ எம்.ரீ. ஹசன் அலி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஐந்து ஆண்டுகளுக்கும் அதிகமாக கிழக்கு மாகாணத்தில் ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து கடைமையாற்றிய ஆங்கில ஆசிரியர்களுக்கு இரு கட்டங்களில் (அ.நி.சுற்றறிக்கை இல. 13 /2005 மற்றும் 21 / 2006 இன் கீழ் ) நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவென்பதையும்;

(ii) மேற்படி அ.நி. சுற்றறிக்கையின் படி கல்வி அமைச்சின் செயலாளரது ED/2/29/4/1/46 ஆம் இலக்க 2005.07.19 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின் படி, 2005.07.28 ஆம் திகதி முதல் மேற்படி ஆசிரியர்களில் ஒரு சிலருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், 2003 – 2004 ஆண்டுகளிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து கடைமையாற்றுகின்ற சுமார் 50 ஆசிரியர்களுக்கு இது வரை நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அம்பாறை மாவட்டத்தின் அம்பாறை, அக்கறைப்பற்று மற்றும் சம்மாந்துறை கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடைமையாற்றுகின்ற அத்தகைய ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கும்;

(ii) மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிரிப்பு, கல்குடா மற்றும் மட்டக்களப்பு கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடைமையாற்றுகின்ற அத்தகைய ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கும்

துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன்?

1170/ '11

5\.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலக தபால் தினத்தை முன்னிட்டு 2010.10.04 ஆம் திகதி கட்டுபெத்த தேசிய பயிலுநர் சபை கேட்போர் கூடத்தில் வைபவமொன்று நடத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) அது தவிர, குறித்த தினத்தைக் கொண்டாடுவதற்காக தபால் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் சிலரால் ஜெட் லயினர் கப்பலில் இராப்போசன விருந்தொன்றுடன் கூடிய நட்புறவுச் சந்திப்பொன்று நடத்தப்பட்டதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விருந்துபசாரத்திற்கென தபால் திணைக்களம் செலவிட்ட பணத் தொகை யாதென்பதையும்;

(ii) அவ்வாறு பணம் செலவிடுவதற்கு உரிய முறையில் அனுமதி பெறப்பட்டிருந்ததா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஆண்டுதோறும் சுமார் 26 மில்லியன் ரூபா நட்டத்தில் இயங்குகின்ற தபால் திணைக்களத்தின் சேவைத் தேவைகள் மற்றும் பணியாட்டொகுதியினரின் தேவைகள் பூர்த்திசெய்யப்படவிருந்தும் அதனை புறந்தள்ளி இவ்வாறு பணத்தைச் செலவு செய்திருப்பதானது அநீதியென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது தொடர்பாக எடுக்கவுள்ள நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0584/ '10

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த நான்கு வருடங்களாக பல்தரப்பு முகவர்களிடமிருந்தும் நட்பு நாடுகளிடமிருந்தும் இருதரப்பு அடிப்படையில் பெறப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கான மேலதிக சலுகை காலத்திற்கு வழங்கப்பட்ட கால நீடிப்பையும் திருப்பிச் செலுத்தப்பட்ட அளவையும்;

(ii) அவ்வசதிகள் எப்போது வழங்கப்பட்டன என்பதையும்;

(iii) எந்நோக்கங்களுக்காகஅது வழங்கப்பட்டதென்பதையும்;

(iv) மேற்குறிப்பிடப்பட்ட கடனிற்காக முன்னெடுப்புக் கட்டணம், கடப்பாட்டுக் கட்டணம், முகாமைத்துவ அல்லது நிர்வாகக் கட்டணம், காப்புறுதிக் கட்டணம், அல்லது பல்வேறு பெயர்களில் வேறு ஏதாவது செலவுகள் இருந்தனவா என்பதையும்;

(v) இவை ஒரே தடவையில் செலுத்தப்பட வேண்டியனவாக இருந்தனவா அல்லது வருடாந்தம் செலுத்தப்பட வேண்டியனவாக இருந்தனவா என்பதையும்;

(vi) ஒரு செலவுக் காரணி என்ற ரீதியில் நாட்டின் மீது தாக்கம் செலுத்தக்கூடிய வருடாந்தம் செலுத்தப்படவேண்டிய மேலேயுள்ள செலவுகளின் மொத்தத் தொகையினையும்

அவர் சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0937/ '10

7.

கௌரவ புத்திக பத்திரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு யூன் தொடக்கம் 2010 ஆம் ஆண்டு யூன் வரையான 5 ஆண்டுகளில் மாத்தறை மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு தொடர்பிலும் வெவ்வேறாக வருடாந்தம்,

(i) சமுர்த்திப் பெறுநர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக செலவிட்ட தொகை யாதென்பதையும்;

(ii) சமுர்த்தி நிவாரணம் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) பொருளாதார வளர்ச்சி காரணமாக சமுர்த்தி நிவாரண உரிமப்பத்திரங்களை மீண்டும் அரசிடம் ஒப்படைத்துள்ள சமுர்த்திப் பெறுநர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) புதிதாக சமுர்த்தி நிவாரணம் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0960/ '10

8.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உபயோகத்திலுள்ள தொலைபேசி வலையமைப்புகளினூடாக மேற்கொள்ளப்படும் உரையாடல்களை செவிமடுப்பதற்கு அல்லது பதிவு செய்வதற்கான உபகரணத்தொகுதியொன்றை அரசு அல்லது ஏதாவதொரு நிறுவனம் இந்நாட்டிற்கு கொண்டு வந்து அல்லது நிறுவி உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதன் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) குறித்த உபகரணத்தொகுதியினால் உள்வாங்கப்படும் தொலைபேசிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) அவ்வாறான உபகரணத்தொகுதியொன்றைக் கொண்டு வந்துள்ளதன் நோக்கம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0977/ '10

9.

கௌரவ எம்.ரீ.ஹசன் அலி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கல்வி அமைச்சினால் குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகளாக இனங்காணப்பட்டுள்ள மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இப்பாடசாலைகளில் முஸ்லிம் பாடசாலைகள் மற்றும் தோட்டப் பாடசாலைகளின் எண்ணிக்கை தனித்தனியே யாவையென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகளின் வளர்ச்சிக்காக எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் தனித்தனியே யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

1172/ '11

10.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'அபி வெனுவென் அபி' (நமக்காக நாம்) இராணுவ வீரர்களுக்கான நிதியத்தின் அதிகாரிகளினால் அத்திட்டத்தின் கீழ் பணம் சேகரித்து, இராணுவ வீரர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஊடகங்கள் மூலம் நாட்டுக்கு அறிவிக்கப்பட்டது என்பதையும்;

(ii) அதற்கமைய, மேற்படி நிதியத்துக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடையாளர்கள், இரணுவ வீரர்களுக்காக பாரிய நிதித் தொகையினை நன்கொடையாக அளித்துள்ளனர் என்பதையும்;

(iii) மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் இபலோகம ரணஜயபுரவில் அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின் மூலம் வீடுகளை வழங்குகையில், இராணுவ வீரர்களிடமிருந்து பணம் அறவிடப்பட்டது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இராணுவ வீரர்களுக்கு இலவசமாக வீடுகளை அமைத்துத் தருவதாகக் கூறி, பணத்துக்கு வீடுகளை வழங்குவதும்;

(ii) பணம் வழங்குவதற்கு விரும்பாத இராணுவ வீரர்களை அந்த வீடுகளிலிருந்து அகற்றுவதும்

நியாயமற்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

0720/ '10

11\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது துணை உற்பத்திப் பொருளான எரிவாயுவை, லாப் கேஸ் கம்பனிக்கு வழங்குவதற்கான உடன்படிக்கையில் எப்போது கைச்சாத்திட்டது என்பதையும்;

(ii) அவ் உடன்படிக்கை எவ் அடிப்படையில் கைச்சாத்திடப்பட்டது என்பதையும்;

(iii) இவ் உடன்படிக்கை விலைமனுக்கோரல் செயன்முறையையும் பின்பற்றியா கைச்சாத்திடப்பட்டது என்பதையும்;

(iv) இல்லையெனில், அது எவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என்பதையும்;

(v) அத்தகைய உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கென தெரிவுசெய்யப்பட்டு அதிகாரமளிக்கப்பட்டவர்களது பெயர்களையும்;

(vi) மேற்குறிப்பிடப்பட்ட கம்பனியினால் நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனைகளையும் விற்பனை செய்யும் எரிவாயுவின் விலையையும்;

(vii) உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியினால் நிறைவேற்ற முடியாமல் போன நிபந்தனைகள் என்னவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் வாயு சந்தைப்படுத்தலை ஆரம்பிக்க முடியுமா என்பதையும்;

(ii) ஆம் எனில், அதனை செய்யாமைக்கான காரணங்கள் என்னவென்பதையும்;

(iii) கூட்டுத்தாபனத்தினால் வாயுவை சந்தைப்படுத்துவதில் நிலவும் தடைகள் என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) விலைமனுக்கோரல் நடைமுறைகளைப் பின்பற்றாமல் குறிப்பிட்ட ஒரு கம்பனிக்கு மாத்திரம் வாயுவை விற்பனை செய்வதன் காரணமாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படும் வருமான இழப்பை இவ் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டது முதல், இற்றைவரை வருடாந்த அடிப்படையில் அவர் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல். ஏன்?

0942/ '10

12\.

கௌரவ புத்திக பத்திரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் ஜாதிக சவிய மற்றும் கம நெகும கருத்திட்டங்களின் கீழ் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராமிய வீதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அதற்காக செலவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டங்களின் கீழ் நன்மை அடையும் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0961/ ’10

13.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து, தற்போது மாணவர் உதவித்தொகை பெறும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மாணவர் உதவித்தொகை பெறும் மாணவரொருவருக்கு மாதமொன்றில் உதவித்தொகையாகச் செலுத்தப்படும் தொகை யாதென்பதையும்;

(iii) ஓர் ஆண்டில் மாணவர் உதவித் தொகை செலுத்தப்படும் மாதங்களின் எண்ணிக்கை மற்றும் ஒரு மாணவருக்கென உதவித்தொகை செலுத்தப்படும் ஆண்டுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாணவர் உதவித்தொகையை செலுத்துவதற்காக மாதத்தில் குறிப்பிட்ட திகதியொன்று ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அத்திகதி யாதென்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதத்திற்குமென மாணவர் உதவித்தொகை வழங்க ஒதுக்கிய திகதிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2010 ஆம் ஆண்டில் உரிய கால எல்லைக்கு உரியமுறையில் மாணவர் உதவித் தொகைகள் செலுத்தப்படவில்லையென்பதையும்;

(ii) அதனால் குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர் உதவித் தொகை பெறும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை உரிய முறையில் முன்னெடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0981/ ’10

14.

கௌரவ எம்.ரீ.ஹஸன் அலி,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சவூதி அரேபியாவில் நடைமுறையில் உள்ள சட்டம், இஸ்லாமிய ஷரீஆ சட்டம் என்பதையும்;

(ii) இஸ்லாமிய ஷரீஆ சட்டத்துக்கு அமைய, நீதிமன்றம் எவரேனும் ஒரு நபருக்கு மரண தண்டனை விதிக்கையில், குறிப்பிட்ட குற்றவாளி சட்ட விரோதச் செயலை அல்லது குற்றத்தை புரியும் திகதியன்று 18 வயதைப் பூர்த்தி செய்திருத்தல் கவனித்தல் கொள்ளப்படுகின்றது என்பதையும்;

(iii) தற்போது சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள செல்வி றிசானா நபீக், இக்குற்றச்சாட்டுக்கு உள்ளாகின்ற போது அவர் உண்மையிலேயே 17 வயதுடையவராக இருந்தார் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், செல்வி றிசானாவுக்கு போலி பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை மற்றும் இலங்கை கடவுச் சீட்டு விண்ணப்பப் படிவத்தை அத்தாட்சிப்படுத்திய சமாதான நீதவானுக்கும் வெளிநாடு செல்வதற்கு உதவிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவன உரிமையாளருக்கும் எதிராக இற்றைவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) றிசானாவுக்கு எதிராக அந்நாட்டு நீதிமன்றத்தில் நடத்தப்பட்ட விசாரணையின்போது உரிய விதத்தில் விடயங்களை முன்வைக்கத் தவறிய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அவருக்கு அத்தண்டனை விதித்தமைக்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1173/ '11

15.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட 6/2010 ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம், 85% ஓய்வூதியம் உரித்தாவது, இராணுவ நடவடிக்கைப் பிரதேசங்களில் 05 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள, ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களுக்கு மாத்திரமே என்பதையும்;

(ii) முப்படை உத்தியோகத்தர்கள் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் கடடைமயாற்றுவது, பல்வேறு சந்தர்ப்பங்களிலும் குறித்த இராணுவ நிர்வாக சேவையின் தேவைப்பாட்டிற்கு அமையவேயன்றி அவர்களின் தனிப்பட்ட விருப்பத்தின் பேரிலல்ல என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) முப்படையின் அனைத்து உத்தியோகத்தர்களையும் ஓய்வு பெறச்செய்கின்றபோது சமமான விதத்தில் கவனிக்க வேண்டும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அவ்வாறாயின், ஓய்வுபெறச்செய்கின்றபோது, இராணுவ நடவடிக்கைச் சேவைக் காலத்தைக் கருத்தில் கொண்டு ஓய்வூதிய சதவீதத்தைக் கணிப்பிடுவதன் மூலம் ஏற்படும் முரண்பாட்டை அகற்றுவதற்கு குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குவாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

கௌரவ அருந்திக்க பர்னாந்து,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

" பிய தசுன மன்றத்தினைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 237 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின் (ஈ) பந்தியின் கீழ் மற்றும் அச்சட்டத்தின் 21, 22, 23 மற்றும் 24 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2011, மே 04 ஆம் திகதிய 1704/09 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.06.09ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்கு விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது).

* 2.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 3.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 4.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2011, பெப்புருவரி மாதம் 19 ஆம் திகதிய 1693/25 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.06.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2011, ஏப்பிறல் மாதம் 08 ஆம் திகதிய 1700/22 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.06.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2011, மே மாதம் 02 ஆம் திகதிய 1704/7 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.06.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2011.06.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கிழான இறக்குமதிகள் தீர்வைகள் சம்பந்தமான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2011 மே 16 ஆம் திகதிய 1706/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— அரசியலமைப்பின் 44(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 14 ஆம் பிரிவு மற்றும் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு, 2011, மே மாதம் 16 ஆம் திகதிய 1706/1 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.06.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்கு விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 15.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 16.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 17.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 18.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 19.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

21.

சமனலகிரி சதராங்க (நாடி) வைத்திய சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

ஒலகங்கல மஹா சுதர்ஷன பரோபகாரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.

லெஸ்டர் ஜேம்ஸ் மற்றும் சுமித்ரா பீரிஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.